# சங்க கால மக்களின் வர்த்தகச் செயல்பாடுகள்

**ரா. சரவணக்குமார்**
*முனைவர்பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை*
*மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், மதுரை*

**முன்னுரை**

சங்க கால மக்களின் வாழ்வியல் முறைகளில் ஒன்றான வர்த்தகம் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. சங்ககால வர்த்தகச் செயல்பாடுகளை அறிய முற்படும் போது அக்காலத்திய மக்கள் பயன்படுத்திய உணவுப் பொருட்கள் அணிகலன்கள், ஆடைகள், நாணயங்கள் உள்ளிட்டவை பற்றி தெளிவாக அறிய முடிகிறது. சங்க காலத் தமிழர்கள் தொழில் திறன் மிக்கவர்கள். சுறுசுறுப்பானவர்கள், புத்தமைப்புகளைப் படைப்பவர்கள், படகையும் கட்டிக் கொண்டு கடலையும் கடக்கக் கூடிய வல்லமை பெற்றவர்கள். அவர்கள் பொருட்களை உற்பத்தி செய்து தங்களுக்குத் தேவையானவை போக உபரியாக உள்ளவற்றை உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் விற்பனை செய்தனர்.

விவசாயம் மட்டுமின்றி வர்த்தக துறையிலும் சங்ககால மக்கள் திறன் பெற்று இருந்தார்கள் என்பது அவர்களின் வெளிநாட்டு வாணிகத் தொடர்புகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. நாணயங்களைப் பயன்படுத்தி வாணிகம் செய்து வந்த மக்கள், பண்டமாற்று முறையிலும் வெளிநாடுகளுடன் வர்த்தகம் செய்துள்ளனர். தொண்டி, கொற்கை முதலான துறைமுகங்கள் சங்ககால ஏற்றுமதிக்கு பெரிதும் உதவியுள்ளன.

**கலைச்சொற்கள்:** சங்க காலம், வணிகம், பண்டமாற்று முறை, துறைமுகம்

**பண்டமாற்று**

உள்நாட்டு வர்த்தகம் பெரும்பாலும் பண்டமாற்றாகவே இருந்தது. குறிஞ்சி, முல்லை, நெய்தல் நில மக்கள் தங்களுக்குள் பண்டமாற்று செய்து கொண்டனர். எடுத்துக்காட்டாக, முல்லை இடையர்கள் மருத உழவர்களிடம் பால், வெண்ணெய், நெய்யைக் கொடுத்து அதற்குப் பதில் நெல், வரகு, துணி ஆகியவற்றைப் பெற்றுச் சென்றனர். அதே போன்று மருத மக்கள் நெய்தல் மக்களிடமிருந்து நெல்லைக் கொடுத்து மீனை வாங்கிச் சென்றனர். பரஸ்பர பண்டமாற்று துவக்க கால சங்கத் தமிழரின் உள்நாட்டு வர்த்தகத்தின் உயிர்நாடியாக இருந்தது.

**வர்த்தக விரிவாக்கம்**

காலப் போக்கில் சங்க காலத்தின் பிற்பகுதியில் நகரங்கள் தோன்றியமையால் உள்நாட்டு வர்த்தகம் வியத்தகு வகையில் விரிவடைந்தது. பூம்புகார், மதுரை, காஞ்சி, போன்ற நகரங்களில் சந்தைகளும், அங்காடிகளும் பிரபலமடைந்தன. உற்பத்தி செய்யப்பட்ட உள்நாட்டிலேயே விற்கப்பட்டதோடு பிற மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. கூடைக்காரர்கள் மூட்டைகளைச் சுமந்து சென்று அங்காடிகளிலும், நுகர்வோர் வாழும் இடங்களிலும் விற்றனர். மதுரையில் விற்கப்பட்ட பொருட்களை மொத்தமாக வாங்கிச் சென்றனர். அதே போன்று பூம்புகார் அங்காடிகளில் சந்தனக் குழம்பும், பல்வகைப் பூக்களும், குறிப்பாக விழாக் காலங்களில் மிகுதியாக விற்பனையாயின. வியாபாரிகளிடம் நேர்மை, நாணயம், நம்பகத்தன்மை காணப்பட்டன. வர்த்தகம் விரிவடைந்த போது இவ்வியாபாரப் பண்புகள் குறையலாயின. அதனால் தான் வியாபாரிகள் பிறர் பொருளையும் தம் பொருள் போல் போற்றிச் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர். இருப்பினும் நினைப்புக்கும் நடைமுறைக்குமிடையே மிகப் பெரிய இடைவெளி இருந்தது. வளத்துக்கிடையே வறுமை! வெளிநாட்டு வாணிபம்

**வெளிநாட்டுத் தொடர்பு**

சங்க காலத் தமிழர்கள் கடல்வழிப் பிரிந்து திரைகடல் ஓடி திரவியம் சேர்த்தவர்கள். நீண்ட நெடுங்காலமாக வெளிநாடுகளுடன் வர்த்தகம் செய்தவர்கள். வெளிநாட்டு வாணிகம் அவர்களுக்குப் புதிதன்று, கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டு – வெளிநாட்டு வர்த்தக தொடர்பு இருந்து வந்தது. இத்தொடர்பு சங்க காலத்தின் பிற்பகுதியில் மேலும் விரிவடைந்து சிறப்புற்றது.

**துறைமுகங்கள்**

தமிழ்நாட்டில் நன்கு வளர்ச்சி அடைந்திருந்த துறைமுகங்கள் மூலம் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வெளிநாட்டுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ன. கப்பல்களுக்கு கடல்வழி காட்ட கலங்கரை விளக்கங்கள் இருந்தன. இவை "கலங்கரை இலக்கு சுடர்" என்று அழைக்கப்பட்டன. பண்டக சாலைகளில் அளந்தறியாப் பல் பண்டங்கள் ஏற்றுமதிக்காக சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. பூம்புகாரும், முசிறியும் புகழ் பெற்ற துறைமுகங்களாகவும், துறைமுகப் பட்டினங்களாகவும் திகழ்ந்தன. இவையன்றி கண்ணனூர், தொண்டி, குமரிமுனை, கொற்கை, புதுச்சேரி, மரக்காணம் முதலிய துறைமுகங்களும் வாணிகத்துக்குப் பயன்பட்டன.

**ஏற்றுமதி இறக்குமதி**

தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு உணவுப் பொருட்கள், உடைக்கான மூலப்பொருட்கள் ஆடம்பர அலங்கார அணிகலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களாவன, அரிசி, மிளகு, இஞ்சி, ஏலம், இலவங்கம், மஞ்சள், சந்தனம், அகில், தேக்கு மரங்கள், தந்தம், முத்து, மரகதம், குநந்தம் போன்ற விலைமிகு கற்கள், விளக்குகள், பருத்து, பட்டுத்துணிகள், மாடு, குரங்கு, மயில், கிளி, சிறுத்தை, புலி போன்ற விலங்குகள் இவற்றுக்குப் பதில் வெளிநாடுகளிலிருந்து கண்ணாடி. உலோக சாமான்கள், மது வகைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

**வெளிநாட்டினர் வருகை**

தமிழ்நாட்டு வர்த்தகக் கப்பல்பள் கிரேக்க ரோமானிய, எகிப்திய, அரேபிய நாடுகளுக்குச் சென்றன. குறிப்பாக தமிழக – ரோமானிய வர்த்தகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. ரோமானியர் யவனர் என்று அழைக்கப்பட்டனர். ரோமானியர் பலர் வாணிகம் செய்வதற்காகத் தமிழ் நாட்டுக்கு வந்து தங்கினர். பூம்புகாரின் பகுதியான மருவூர்ப்பாக்கத்தில் வெளிநாட்டு மாலுமிகள் அதிகம் காணப்பட்டனர். வாணிகர்கள் தத்தம் சேரிகளில் வசித்தனர். அங்காடிகளில் ஒவ்வொரு கடைக்கும் எதிரே ஒரு கொடி பறக்கவிடப்பட்டு, அக்கொடி மீது அக்கடையில் விற்கப்படும் பொருட்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

**வெளிநாட்டு வர்த்தகம்**

கி.பி. முதல் நூற்றாண்டில் ரோமானியரோடு வர்த்தக விரிவாக்கம் பற்றிய பேச்சு வார்த்தை நடத்த தமிழ் நாட்டிலிருந்து ரோமானியப் பேரரசர் அகஸ்டஸ் சீசர் அரசவைக்கு இரண்டு தூதுக் குழுக்கள் அனுப்பப்பட்டன. அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் ரோமாபுரி பொறாமைப்படும் அளவுக்கு விரிவடைந்தது. எனினும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசு வீழ்ச்சி அடைந்த பின்னர் இருநாட்டு வாணிகத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. ரோமானியப் பேரரசும் சங்க காலமும் ஒரே காலகட்டத்தில் வீழ்ச்சியடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது! வாணிக வீழ்ச்சி ஒரு நாட்டின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்பது வரலாறு கற்பிக்கும் பாடங்களில் ஒன்றாகும்.

**வரவினம்**

சங்ககால மன்னர்கள் வரி வருவாயை நம்பியே இருந்தனர். வரி () என்ற சொல் சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை. மாறாக இறை, கறை, இரவு போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. மக்களிடமிருந்து இறுக்கப்பட்டதால் இறை என்றும், மக்களிடமிருந்து

கேட்டுப் பெறப்பட்டமையால் இரவு என்றும் அழைக்கப்பட்டது. நிலவரி இறை அல்லது கறையாகும். வரிவதிப்பு, வரியின் அளவு, வரி வசூலிக்கும் முறை பற்றிய சட்டங்கள் இல்லாமையால் இவை பற்றிய அறநெறி மரபுகள் வழக்கத்தில் இருந்தன. உதாரணமாக மக்களின் அன்பு கெடாதபடி வரிவசூலிக்க வேண்டும். மக்களின் மனம் புண்படுமாறு வரி வசூலிப்பது யானை புகுந்த புலம் போலாகிவிடும், அரசனும் கெடுவான், நாடும் நலிவுறும். கொடுங்கோலால் வரிவசூல் செய்யும் மன்னன் கள்வனைப் போன்றவன். வானம் பொய்த்து விளைச்சல் குன்றிய போது மக்களை வரி செலுத்தும்படி வற்புறுத்தலாகாது. எனவே மன்னரின் வரிக் கொள்கை நியாயமாகவும், நேர்மையாகவும் இருத்தல் வேண்டும். ஏனெனில் நெறியற்ற, நேர்மையற்ற வரிவசூலால் மன்னன் நாட்டையே இழக்க நேரிடும்.

வரிகளில் முதல் முக்கியத்துவம் வாய்ந்தது நிலவரி ஆகும். பொதுவாக, நில வருவாய் மட்டுமின்றி அனைத்து வருவாயின் மொத்த மதிப்பில் ஆறில் ஒரு பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. கருவூலத்தை நிரப்பிய பிற வரிகளாவன: 1. இறக்குமதி, ஏற்றுமதி பொருட்களுக்கான சுங்க வரி 2. வாரிசின்றி இறப்போரின் சொத்துக்கள் 3. சட்டத்தை மீறுவோர் மீது விதிக்கப்படும் அபராதத் தொகை 4. குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் 5. இறையிலி நிலங்களைப் பார்ப்பணர்களிடமிருந்து பெறப்பட்ட வரிப்பணம் 6. போரில் தோற்ற நாடுகளிடமிருந்து கவர்ந்து வரப்பட்ட பணமும், பொருளும், இது அரசாங்கத்தின் மிகப் பெரிய வருவாயாகக் கருதப்பட்டது! இதோடு தோற்ற அரசர்களிடமிருந்து பெறப்பட்ட திறைப்பணம். பொதுவாக, வரிகள் பணமாகவோ அல்லது பொருளாகவோ தரப்பட்டன பார்பபனர்களுக்கு தானமாகக் கொடுக்கப்பட்ட பிரமதேய கிராமங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

**செலவினம்**

தற்போது உள்ளதைப் போன்று பொது வருவாய்களையும், செலவுகளையும் கொண்ட வரவு-செலவுத் திட்டம் அக்காலத்தில் இல்லை. சங்ககால மன்னர்கள் அடிக்கடி போரிட்டு வந்தமையால் அப்போர்களுக்கான செலவே அதிகம். அதற்கு அடுத்தப்படியாக அரண்மனையிலிருந்த அரச பரம்பரையைச் சேர்ந்த பெருங்கூட்டத்துக்கான செலவாகும். சுரங்கக் கூறின், போர்ச் செலவும், அரண்மனைச் செலவும், அரசாங்கச் செலவும் வருவாயின் மிகப் பெரிய பகுதியை விழுங்கிவிட்டன. இவை போக எஞ்சி இருந்த வருவாயே நிரந்தர மதிப்புள்ள பொதுப் பணிகளுக்கும், மக்கள் நலப் பணிகளுக்கும் செலவிடப்பட்டது. அரசாங்கத்தின் வரவினங்கள் அனைத்தும் அரசுக் கருவூலத்தில் செலுத்தப்பட்டன.

**முடிவுரை**

உழவுத் தொழிலைப் போன்றே பண்டைத் தமிழர் வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தனர். மக்களுள் பெரும்பாலோர் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். சிலர் தலைமுறை தலைமுறையாக செய்து வந்த தொழிலை மாற்றி, வாணிபத்தில் ஈடுபட்டனர். முக்கியமாகப் பல புலவர்கள் வாணிபம் செய்ய ஆரம்பித்தனர். மதுரைப் பண்ட வாணிகள் இளந்தேவனார், மர அறுவை வணிகர் இளவேட்டனார், கணியன் பூங்குன்றனார், தங்கால் பொற்கொல்லன், வெண்ணாகனார், மதுரைக் கொல்லன் புல்லன் ஆகிய புலவர்களின் பெயரிலிருந்தே அவர்கள் செய்த தொழில்கள் தெரிய வருகிறது. சங்க காலத்தில் நடைபெற்று வந்த வாணிபங்களில் சிறப்பானவை உடை வாணிபம், ஓலை வாணிபம், கூல வாணிபம், பொன்வாணிபம் ஆகியவையாகும். இவ்வாறு சங்க காலப் பொருளாதார நிலை பயிர்த்தொழில் மற்றும் வாணிபத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது.

**பார்வை நூல்கள்**

1. ந. சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல், 2017.
2. புறம். 389
3. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், 2017
4. சிலம்பு, III 85
5. குறுந்தொகை: 295
6. உ.வே.சாமிநாத ஐயர், சங்கதமிழும், பிற்கால தமிழும், 1957.